**1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**O.S.No.335/2025**

2026 வது ஆண்டு ஏப்ரல் 15–ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (2069 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.தமிழரசி | வட்டம் | பாளையங்கோட்டை |
| க.பெ | திரு.சங்கர் ராம் ஜெகதிசன் | கிராமம் | பாளையங்கோட்டை |
| வயது | 44 | | |

15.04.2026 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 1 ம் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | |
|---|---|
| 1 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது. | வா.சா.ஆ.1 |
| 2 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது. | வா.சா.ஆ.2 |
| 3 ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது. | வா.சா.ஆ.3 |
| திருமண கட்டண இரசீது அசல் | வா.சா.ஆ.4 |
| 2 ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.5 |
| 3 ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்படுகிறது. | வா.சா.ஆ.6 |
| சங்கர் ராம் ஜெகதிசன் என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.7 |
| நீதிமன்ற உத்தரவு | வா.சா.ஆ.8 |
| 2 ம் பிரதிவாதி வழங்கிய மேலெழுத்து கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.9 |
| விவகாரத்துப் பத்திரம் அசல் | வா.சா.ஆ.10 |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இறந்து போன சங்கர் ராம் ஜெகதிசன் என்பவருக்கு நான் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். என்னை திருமணம் செய்வதற்கு முன்பு சங்கர் ராம் ஜெகதிசன் என்பவருக்கு வேறு ஒருவருடன் திருமணம் நடைபெற்று மேற்படி திருமணம் நீதிமன்றத்தின் மூலமாக விவகாரத்து பெறப்பட்டது என்றால் சரிதான். எனக்கும், மகேஷ் என்பவருக்கும் 2008ம் வருடம் திருமணம் நடைபெற்று 2011ம் வருடம் பெரியவர்கள் முன்னிலையில் விவகாரத்து பெறப்பட்டது என்றால் சரிதான். எனது முதல் கணவருக்கு திருமணம் நடைபெற்றது என்றால் திருமணம் நடைபெற்றதாக கேள்விபட்டேன். வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட கோட்டாச்சியரிடம் தான் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. உரிமையியல் நீதிமன்றத்தை நாட இயலாது என்றால் சரியல்ல. சட்டப்படி நான் 1வது கணவரிடம் இருந்து விவகாரத்து பெறவில்லை என்பதால் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.04.15 18:27:08 +0530